

ஜப்பான் நாட்டின் ஒசாகா நகரில் நடைபெற்று வரும் ஒசாகா/கான்சாய் ஜப்பான் சுற்றுலா கண்காட்சி 2023ல் அமைக்கப்பட்டுள்ள தமிழ்நாடு சுற்றுலாத்துறையின் அரங்கினை பீகார் மாநில துணை முதலமைச்சர் தேஜஸ்வீ பிரசாத் யாதவ் , சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் ஆகியோர் முன்னிலையில், ஜப்பானுக்கான இந்திய தூதர் சிபி ஜார்ஜ் திறந்து வைத்தார். சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை முதன்மை செயலாளர் டாக்டர்.க.மணிவாசன் உடன் உள்ளார்.

# ஜப்பானில் தமிழ்நாடு சுற்றுலாத்துறை அரங்கு!

## அமைச்சர் கா.ராமச்சந்திரன் பார்வையிட்டார்!

ஒசாகா, அக்.28

ஜப்பான் நாட்டின் ஒசாகா நகரில் நடைபெற்று வரும் ஒசாகா/கான்சாய் ஜப்பான் சுற்றுலா கண்காட்சி - 2023-ல் அமைக்கப்பட்டுள்ள தமிழ்நாடு சுற்றுலாத்துறையின் அரங்கினை பீகார் மாநில துணை முதலமைச்சர் தேஜஸ்வீ பிரசாத் யாதவ், சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் ஆகியோர் முன்னிலையில், ஜப்பானுக்கான இந்திய தூதர் சி.பி.ஜார்ஜ் திறந்து வைத்தார்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் சிறப்பான நடவடிக்கைகளால் தற்போது, இந்தியாவிலேயே சுற்றுலாத்துறையில் முதன்மை மாநிலமாக தமிழ்நாடு விளங்கி வருகின்றது. சுற்றுலாவை மேம்படுத்தும் வகையில் சர்வதேச செஸ் ஒலிம்பியாட் போட்டி, சர்வதேச அலைச்சறுக்கு போட்டி உள்ளிட்ட போட்டிகள் மாமல்லபுரத்தில் நடத்தப்பட்டு வருகின்றன. இதன் காரணமாக மாமல்லபுரம் சுற்றுலாத்தலம் உலகளவில் முக்கியத்துவம் பெற்று வெளிநாட்டவர்களால் அதிக அளவில் பார்வையிடப்படும் சுற்றுலாத்தலமாக தற்போது விளங்கி வருகின்றது.

தமிழ்நாடு சுற்றுலாத்துறை வெளிநாட்டு மற்றும் வெளிமாநில சுற்றுலா பயணிகளை கவரும் வகையில் தமிழ்நாடு சர்வதேச பலூன் திருவிழா, சர்வதேச பட்டம் விடும் திருவிழா, சென்னை திருவிழா, மாமல்லபுரத்தில் இந்திய நாட்டிய விழா உள்ளிட்ட பல்வேறு விழாக்களை நடத்தி வருகின்றது.

தமிழ்நாட்டில் உள்ள பழமையான சுற்றுலாத் தலங்கள், கோவில்கள், இயற்கை எழில் கொஞ்சும் மலைகள், நீர்வீழ்ச்சிகள், கடற்கரைகள் குறித்த கழுகுக்கண் பார்வை (TOP ANGLE VIEW) அனுபவத்தையும், சுற்றுலா பயணிகள் நேரில் சென்று பார்வையிட்டதைப் போன்ற அனுபவங்களையும் தரும் வகையிலான குறும்படங்கள் உலகமெங்கும் உள்ள சுற்றுலா பயணிகளை எளிதில் சென்றடையும் வகையில் யூடியூப், பேஸ்புக், எக்ஸ் (டிவிட்டர்), இன்ஸ்டாகிராம் உள்ளிட்ட சமூக வலைதளங்கள் மூலமாக தொடர்ந்து வெளியிடப்பட்டு வருகின்றன.

அதிக அளவில் வெளிநாட்டு சுற்றுலா பயணிகளை தமிழ்நாட்டிற்கு ஈர்ப்பதற்காக வெளிநாட்டு சுற்றுலா ஏற்பாட்டாளர்கள் பங்கு பெறும் இந்திய அளவிலான பயண சுற்றுலா சந்தைகள், வெளிநாடுகளில் நடைபெறும் பயண சுற்றுலா சந்தைகள் மற்றும் சுற்றுலா கண்காட்சிகளில் தமிழ்நாடு சுற்றுலாத்துறையின் அரங்கம் அமைக்கப்பட்டு தமிழ்நாட்டின் சுற்றுலா சிறப்புகளை தெரிவிக்கும் குறும்படங்கள் திரையிடப்பட்டும், புத்தகங்கள், சிறு கையேடுகள் ஆகியவை பயண ஏற்பாட்டாளர்கள், வெளிநாடுகளைச் சேர்ந்த சுற்றுலாத்துறையினர், பார்வையாளர்களுக்கு வழங்கப்பட்டும் கவன ஈர்ப்பு செய்யப்படுகின்றது.

ஜப்பான் நாட்டின் ஒசாகா நகரில் ஒசாகா இன்டெக்ஸ் அரங்கில் 26.10.2023 தொடங்கி 29.10.2023 வரை நடைபெற்று வரும் ஒசாகா /கான்சாய் ஜப்பான் சுற்றுலா கண்காட்சி - 2023-ல் (Tourism EXPO Japan 2023 OSAKA/KANSAI) தமிழ்நாடு சுற்றுலாத்துறையின் சார்பில் அரங்கம் அமைக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டின் பாரம்பரியம், பண்பாடு மற்றும் கலாச்சாரத்தினை பிரதிபலிக்கும் வகையில் அமைக்கப்பட்ட இந்த அரங்கில் புகழ்பெற்ற ஸ்ரீரங்கம் குதிரைச் சிற்ப தூண்களின் மாதிரி வடிவம் அமைக்கப்பட்டு, மாமல்லபுரம் கடற்கரை கோவில் உள்ளிட்ட சுற்றுலாத்தலங்களின் புகைப்படங்களும், தஞ்சாவூர் தலையாட்டி பொம்மைகள் உள்ளிட்ட தமிழ்நாட்டின் புவிசார் குறியீடு பெற்ற கைவினைப் பொருட்களும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

தமிழ்நாடு சுற்றுலாத் துறையின் அரங்கினை பீகார் மாநில துணை முதலமைச்சர் தேஜஸ்வீ பிரசாத் யாதவ், சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் ஆகியோர் முன்னிலையில், ஜப்பானுக்கான இந்திய தூதர் சி.பி. ஜார்ஜ் திறந்து வைத்தார்.

தமிழ்நாட்டின் சுற்றுலாத்தலங்களின் சிறப்புகளை ஜப்பான் மொழியில் விளக்கங்களுடன் தெரிவிக்கும் புகைப்படங்கள் அடங்கிய புத்தகத்தினை சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை அரசு முதன்மைச் செயலாளர் டாக்டர். க.மணிவாசன் ஆகியோர் வெளியிட்டு கண்காட்சிக்கு வருகை தந்த ஜப்பான் நாட்டு சுற்றுலா பயணிகள் மற்றும் சுற்றுலா தொழில் முனைவோர்களிடம் வழங்கினர்.

இந்த அரங்கத்தை ஏராளமான வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் பார்வையிட்டு, தமிழ்நாட்டின் சிறப்புகளை அறிந்தனர்.

ஆளுநர் மாளிகை சொன்னதெல்லாம் உண்மைக்கு மாறானது!

# சி.சி.டி.வி. காட்சி - புகைப்படங்கள் வெளியிட்டது காவல்துறை!

## உண்மை அம்பலமாகியுள்ளது!

சென்னை, அக்.28-

ஆளுநர் மாளிகைக்கு வெளியே பெட்ரோல் பாட்டில் வீச்சு சம்பவம் குறித்து ஆளுநர் மாளிகை அளித்த புகார் முற்றிலும் உண்மைக்கு மாறானது, பொய்யானது என்று தமிழ்நாடு காவல்துறை சி.சி.டி.வி. வீடியோ காட்சிகள் மற்றும் புகைப்படங்களை ஆதாரத்துடன் வெளியிட்டு ஆளுநர் மாளிகையின் புகார் பொய்ப்புகார் என்பதை அம்பலப்படுத்தியுள்ளது.

இது குறித்த விவரம் வருமாறு:-

சென்னை கிண்டியில் உள்ள ஆளுநர் மாளிகை முன்பு பெட்ரோல் பாட்டில் வீசப்பட்ட சம்பவத்தில் பிரபல ரவுடியான கருக்கா வினோத் என்பவர் பெட்ரோல் பாட்டிலை வீசிவிட்டு தப்பிக்க முயன்றபோது கருக்கா வினோத்தை போலீசார் உடனடியாக விரட்டிப் பிடித்து கைது செய்தனர்.

உடனடியாக எப்.ஐ. ஆரும் பதிவு செய்யப்பட்டு, சிறையில் அடைத்தது மட்டுமின்றி மேல்கொண்டும் தொடர்ந்து விசாரித்து வருகின்றனர். குற்றவாளியை காவலில் எடுத்து விசாரிக்கவும் நீதிமன்றத்தில் போலீசார் மனு தாக்கல் செய்துள்ளனர்.

இந்நிலையில் பெட்ரோல் பாட்டில் வீச்சு சம்பவம் தொடர்பாக ஆளுநர் மாளிகை சார்பில் சென்னை மாநகர காவல் ஆணையர் அலுவலகத்திலும், டிஜிபி அலுவலகத்திலும் புகார் அளிக்கப்பட்டது. அதில், சில விஷமிகள், பெட்ரோல் குண்டுகளுடன் ஆளுநர் மாளிகையின் பிரதான நுழைவாயில் 1 வழியாக ராஜ் பவனுக்குள் நுழைய முயன்றனர். ஆளுநர் மாளிகை பாதுகாப்பு காவலர்கள் அவர்களைத் தடுத்தனர். அப்போது ஒரு பெட்ரோல் குண்டை பிரதான நுழைவாயில் பகுதியில் வீசியுள்ளனர். அந்த குண்டு பெரிய சத்தத்துடன் வெடித்தது.

இதையடுத்து காவலர்கள் அந்த நபர்களை பிடிக்க முயன்ற நிலையில், மீண்டும் மற்றொரு பெட்ரோல் வெடிகுண்டு வெடித்தது. இதில் ஆளுநர் மாளிகை பிரதான நுழைவாயில் பகுதி கடுமையாக சேதமடைந்துள்ளது என்றும் காவல்துறை வழக்குப்பதிவு செய்யவில்லை என்றும் ஆளுநர் மாளிகை குற்றம்சாட்டியது.

ஆனால், ஆளுநர் மாளிகையின் புகாருக்கு நேற்று முன்தினம் (26.10.2023) இரவே டி.ஜி.பி. சங்கர் ஜிவால் மறுப்பு அறிக்கை வெளியிட்டார்.

இந்நிலையில், ஆளுநர் மாளிகை முன் பெட்ரோல் குண்டு வீசிய கருக்கா வினோத், வந்தது, பெட்ரோல் குண்டு வீச முயன்றது, அவரை போலீசார் சுற்றி வளைத்துப் பிடித்து கைது செய்தது ஆகிய காட்சிகள் அடங்கிய சி.சி.டி.வி. காட்சிகளை காவல்துறையினர் வெளியிட்டனர். டி.ஜி.பி. சங்கர் ஜிவால், சென்னை மாநகர காவல் ஆணையர் சந்தீப் ராய் ரத்தோர் ஆகியோர் கூட்டாக நேற்று (27.10.2023) செய்தியாளர்களைச் சந்தித்தனர்.

அப்போது, ஆளுநர் மாளிகை புகாரில் தெரிவிக்கப்பட்டது போல் ஒன்றுக்கும் மேற்பட்ட நபர்களால் பெட்ரோல் குண்டு வீசப்படவில்லை. வந்தது ஒரே ஒரு நபர் தான். அவர் அத்துமீறி ஆளுநர் மாளிகையினுள் நுழைய முற்பட்டு ராஜ் பவன் வாயிற்காப்பாளர்களால் தடுத்து நிறுத்தப்படவும் இல்லை. அவரை வெளியிலேயே சுற்றி வளைத்து தடுத்து கைது செய்தது காவல்துறையினர் தான் எனவும், ஆளுநர் மாளிகை சொன்னதெல்லாம் உண்மைக்கு முற்றிலும் புறம்பானது என்றும் டிஜிபி சங்கர் ஜிவால் தெரிவித்துள்ளார்.

சி.சி.டி.வி. காட்சிகளையும், புகைப்படங்களையும் ஆதாரமாக வெளியிட்டு, ஆளுநர் மாளிகை கூறிய புகார்கள் முற்றிலும் பொய்யானவை என தமிழ்நாடு காவல்துறை உண்மை ஆதாரங்களை வெளியிட்டு விளக்கம் அளித்துள்ளது.

க.சுந்தர் எம்.எல்.ஏ. தலைமை! நாத்திகம் நாகராசன் - இறையன்பன் குத்தூஸ் - கவிஞர் நன்மாறன் பங்கேற்பு!

# காஞ்சிபுரம் தெற்கில் கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவை சார்பில் பேச்சுப் போட்டி!

## க.செல்வம் எம்.பி. - சி.வி.எம்.பி.எழிலரசன் எம்.எல்.ஏ. - மேயர் எம்.மகாலட்சுமி - யுவராஜ் சிறப்புரை!

காஞ்சிபுரம், அக். 27 -

முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா வினை முன்னிட்டு காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட, கலை, இலக்கிய, பகுத்தறிவு பேரவை நடத்தும் பள்ளி - மாணவ - மாணவியக்ளுக்கான திறனறிதல் ஒப்புவித்தல் போட்டி இன்று (28.10.2023) காலை 9 மணிக்கு , கலைஞர் பவள விழா மாளிகை, டி.கே.நம்பித் தெரு, சின்ன காஞ்சிபுரத்தில் நடைபெறுகின்றன.

விழாவில் மாவட்டக் கழகச் செயலாளர் - க.சுந்தர் எம்.எல்.ஏ. தலைமையேற்று போட்டியில் வெற்றி பெறும் மாணவ, மாணவிகளுக்கு பரிசுகள் மற்றும் சான்றிதழ்களை மாவட்டக் கழகச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. வழங்குகிறார். கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவை மாவட்ட அமைப்பாளர் நாத்திகம் நாகராசன் வரவேற்றுப் பேசுகிறார்.

மாநகரச் செயலாளர் தமிழ்செல்வன், ஒன்றியச் செயலாளர்கள் பி.எம். குமார், பி.எம்.பாபு, க.குமணன், பகுதிச் செயலாளர்கள் சந்துரு, கே.திலகர், அ.தசரதன், க.வெ்கடேசன், கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவை நிர்வாகிகள் கலைச்செல்வி, ஜெகநாதன், எம்.ஆர்.தனசேகரன், எ.சங்கர், வல்லரசு செங்குட்டுவன்,. முல்லை. வாணன் மற்றும் சிறுவேடல் க.செல்வம் எம்.பி., சி.வி.எம். பி.எழிலரசன் எம்.எல்.ஏ., மேயர் மகாலட்சுமி ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இதில் ச.இனியரசு, டி.வி. கோகுலகண்ணன், மலர் விழி குமார், சன்பிராண்டு கே. ஆறுமுகம், இரா. நாகன், டி.ஆர். நாராயணன், டாக்டர் ஆர்.டி. அரசு, எம்.எஸ்.சுகுமார், எஸ்.கே.பி.சீனிவாசன், எஸ். சிகாமணி, பி.சசிகுமார், எழிலரசி, சுந்தரமூர்த்தி, வெளிக்காடு ஏழுமலை, எஸ்.டி.பிரேம்சந்த், எஸ். உசேன், எஸ்.கே. ராஜேந்திரன் மற்றும் பலர் கலந்து கொள்கின்றனர்.

கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவை துணை அமைப்பாளர் சு.முரளிதரன் நன்றி கூறுகிறார்.

'பாரத்' பெயர் மாற்றம்: மதச்சார்பற்ற - ஜனநாயகக் கூட்டாட்சித் தன்மை கொண்ட

# நவீன இந்தியாவைச் சீர்குலைக்கும் முயற்சிகள் தடுக்கப்பட வேண்டும்!

## 'தீக்கதிர்' நாளேடு தலையங்கத்தில் வலியுறுத்தல்!

சென்னை, அக். 28-

'தீக்கதிர்' நாளிதழின் நேற்றைய (27.10.2023) பதிப்பில், "பெயர் மாற்றம் மட்டும் அல்ல" எனும் தலைப்பில் வெளியான தலையங்கத்தில், "மதச்சார்பற்ற, ஜனநாயக, கூட்டாட்சித் தன்மை கொண்ட நவீன இந்தியாவைச் சீர்குலைக்க மேற்கொள்ளப்படும் முயற்சிகள் அனைத்தும் தடுக்கப்பட வேண்டும்!" என்று குறிப்பிட்டுள்ளது.


தீக்கதிர்

2023 அக்டோபர் 27 வெள்ளிக்கிழமை

பெயர் மாற்றம் மட்டும் அல்ல...

பள்ளிகளில் அனைத்து வகுப்புகளுக்குமான பாடப்புத்தகங்களில் இடம் பெற்றுள்ள 'இந்தியா' என்ற வார்த்தைக்குப் பதிலாக 'பாரத்' என்று மாற்றப்பட வேண்டும் என பள்ளிப் பாடத்திட்டத்தை திருத்துவதற்காக என்.சி.இ. ஆர்டி நியமித்துள்ள குழு பரிந்துரை செய்துள்ளது. இது தேவையற்ற வேலை என்பதோடு மாணவர்களிடையே வீண் குழப்பத்தை ஏற்படுத்தக்கூடிய ஒன்றாகும்.

வறுமை, வேலையின்மை, விலைவாசி உயர்வு, பணவீக்கம் என பல்வேறு பிரச்சனைகளில் நாடு சிக்கித் தவிக்கும் நிலையில், மக்களது கவனத்தை திசை திருப்பும் வகையில்

'தீக்கதிர்' தலையங்கம் வருமாறு:-

பள்ளிகளில் அனைத்து வகுப்புகளுக்குமான பாடப்புத்தகங்களில் இடம் பெற்றுள்ள 'இந்தியா' என்ற வார்த்தைக்குப் பதிலாக 'பாரத்' என்று மாற்றப்பட வேண்டும் என பள்ளிப் பாடத்திட்டத்தை திருத்துவதற்காக என்.சி.இ. ஆர்.டி நியமித்துள்ள குழு பரிந்துரை செய்துள்ளது. இது தேவையற்ற வேலை என்பதோடு மாணவர்களிடையே வீண் குழப்பத்தை ஏற்படுத்தக்கூடிய ஒன்றாகும்.

வறுமை, வேலையின்மை, விலைவாசி உயர்வு, பணவீக்கம் என பல்வேறு பிரச்சனை களில் நாடு சிக்கித் தவிக்கும் நிலையில், மக்களது கவனத்தை திசை திருப்பும் வகையில் பல்வேறு வேலைகளில் நரேந்திர மோடி அரசு ஈடுபட்டுள்ளது. நாட்டு மக்களிடையே பதற்றத்தையும், குழப்பத்தையும் ஏற்படுத்தக்கூடிய வகையில் பல்வேறு அறிவிப்புகளை அவ்வப்போது வெளியிட்டு வருகிறது. அதன் ஒரு பகுதியாகவே இந்த பெயர் மாற்ற வேலையும் அமைந்துள்ளது எனலாம்.

இந்திய அரசியல் சட்டத்தின் முகவுரையில் ஒரு இடத்தில் 'பாரத்' என்ற பெயர் இடம் பெற்றுள்ளது என்பது உண்மைதான். எனினும் அரசியல் சட்டம் துவங்கி அனைத்து ஆவணங்களிலும் இந்தியா என்கிற பெயரே நிலை பெற்றுள்ளது. அரசியல் நிர்ணய சபையில் நாட்டினுடைய பெயர் எவ்வாறு இடம் பெற வேண்டும் என நீண்ட நெடிய விவாதங்கள் நடைபெற்று முடிவில் இந்தியா என இறுதி செய்யப்பட்டுள்ளது.

ஆனால் ஜி20 மாநாட்டுத் தலைவர்களுக் கான விருந்து அழைப்பிதழில் முதன்முறையாக குடியரசுத் தலைவரின் பெயருக்கு முன்பாக பாரத் என்கிற பெயர் இடம் பெற்றது. அதைத் தொடர்ந்து மாநாட்டில் பிரதமரின் இருக்கைக்கு முன்பு பாரத் என்கிற பெயர் எழுதப்பட்டிருந் தது. நாட்டின் பெயரையும் மாற்றப் போவதாகச் செய்தி வெளியாகி பின்னர் அது மறுக்கப்பட்டது.

ஆனால் அறிவிக்காமலேயே நாட்டின் பெயரை பாரத் என்று மட்டும் அழைப்பதற்கான பணியில் ஒன்றிய அரசு கொஞ்சம் கொஞ்சமாக ஈடுபட்டுள்ளது. அதற்கு ஒத்திசைவாகவே என்.சி.இ.ஆர்.டி குழுவின் பரிந்துரை அமைந்துள்ளது.

பாரத் என்று பெயரை மட்டுமல்ல, மதச்சார் பற்ற நாடு என்ற உள்ளடக்கத்தையே மாற்ற முயற்சி நடக்கிறது. ஏற்கெனவே பாடத்திட்டத் தில் பல்வேறு குழப்பங்களை ஒன்றிய அரசு மேற்கொண்டு வருகிறது. வரலாற்றை புராண அடிப்படையில் திருத்தி எழுதுகிறது. அறிவியலுக்கு பதிலாக புனை கதைகளைப் புகுத்துகிறது.

ஆர்.எஸ்.எஸ். இந்த நாட்டை 'ஆரிய வர்ஷம்' என்று அழைக்க வேண்டும் என்று கூறுகிறது. இதற்கான பரிந்துரைகூட அடுத்து வரக் கூடும். மதச்சார்பற்ற, ஜனநாயக, கூட்டாட்சித் தன்மை கொண்ட நவீன இந்தியாவை சீர்குலைக்க மேற் கொள்ளப்படும் முயற்சிகள் அனைத்தும் தடுக்கப்பட வேண்டும்.

இவ்வாறு 'தீக்கதிர்' தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தமிழ்நாடு வரிகள் தொடர்பான - நிலுவைகள் தீர்வு செய்தல் திட்டம்!

# 2023 விழிப்புணர்வு திட்ட விளக்க கூட்டம்!

## அமைச்சர் பி.மூர்த்தி தலைமையில் நடைபெற்றது!

சென்னை, அக்.28

2023ஆம் ஆண்டு, தமிழ்நாடு வரிகள் (நிலுவைகள் தீர்வு செய்தல்) தொடர்பான சமாதான திட்டத்தின் சிறப்பியல்புகளை வணிகர்களுக்கு விளக்கும் வகையில், வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி. மூர்த்தி தலைமையில், அரசு செயலாளர், வணிகவரி மற்றும் பதிவுத்துறை , திருமதி. பா.ஜோதி நிர்மலாசாமி, வணிகவரித்துறை ஆணையர், முனைவர் டி. ஜகந்நாதன் மற்றும் வணிகவரித்துறை உயர் அலுவலர்கள் கலந்து கொள்ளும், சமாதானம் திட்டம் 2023 விழிப்புணர்வு மற்றும் திட்ட விளக்க கூட்டம் :

மதுரை, திருநெல்வேலி, திருச்சி மற்றும் விருதுநகர் கோட்டங்களை சார்ந்த வணிகர்களுக்கு 31.10.2023 செவ்வாய்கிழமை அன்று முற்பகல் 10.00 மணி அளவில் மதுரையில் உள்ள துவாரகா பேலஸ் அரங்கிலும், (Dwarka Palace, பாண்டி கோவில் அருகில்)

சென்னை (வடக்கு), சென்னை (தெற்கு), சென்னை (மத்தியம்), காஞ்சிபுரம், செங்கல்பட்டு, திருவள்ளூர், வேலூர் மற்றும் கடலூர் கோட்டத்தை சார்ந்த வணிகர்களுக்கு 06.11.2023 திங்கட்கிழமை அன்று முற்பகல் 10.00 மணி அளவில் சென்னையில் உள்ள கலைவாணர் அரங்கிலும், கோயம்புத்துர், சேலம், ஈரோடு, திருப்பூர் மற்றும் ஒசூர் கோட்டத்தை சார்ந்த வணிகர்களுக்கு 07.11.2023 செவ்வாய்கிழமை அன்று முற்பகல் 10.00 மணி அளவில் கோயம்புத்துரில் உள்ள ஆர்.எஸ். புரம் மாநகராட்சி கலையரங்கிலும் திட்ட விளக்க கூட்டம் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் சமாதானத் திட்டத்தின் கீழ் பயனடைய உள்ள சம்பந்தபட்ட பகுதிகளைச் சார்ந்த வணிகர்கள் கலந்துகொண்டு பயன்பெறுமாறு வணிகவரித்துறை சார்பாக கேட்டுக்கொள்ளப்படுகிறது.

மக்களவை, மாநில சட்டப் பேரவைகளுக்கு ஒரே நேரத்தில் தேர்தல் நடத்த

# 30 லட்சம் மின்னணு வாக்குப் பதிவு இயந்திரங்கள் தேவை!

புதுடெல்லி, அக்.28-

ஒரே நேரத்தில் மக்களவைக்கும் மாநில சட்டப் பேரவைகளுக்கும் தேர்தல் நடத்த வேண்டுமானால் இந்தியத் தேர்தல் ஆணையத்துக்கு சுமார் 30 லட்சம் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் தேவை என்றும் இதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ள ஏறத்தாழ ஒன்றரை ஆண்டுகால அவகாசம் தேவை என்றும் தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

மக்களவை, மாநில சட்டப்பேரவைகளுக்கு ஒரே நேரத்தில் தேர்தல் நடத்துவது குறித்து அறிக்கை தாக்கல் செய்யும் பணியில் ஈடுபட்டுள்ள 22-ஆவது சட்ட ஆணையம், கடந்த சில மாதங்களுக்குமுன் தேர்தல் ஆணையத்திடம் ஆலோசனை நடத்தியது. அப்போது, தேர்தல் ஆணையம் மேற்கொள்ள வேண்டிய ஏற்பாடுகள், அதன்முன் உள்ள சவால்கள் குறித்து ஆலோசிக்கப்பட்டதாக தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

இத்தகைய ஒரே தேர்தல் நடை முறைக்கு வரும்போது அமைக்கப்பட வேண்டிய வாக்குச்சாவடிகள் எண்ணிக்கை குறித்து அந்தக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது. கடந்த 2019 மக்களவைத் தேர்தலின்போது 12.50 லட்சம் வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டன.

### இயந்திரங்களுக்குப் பற்றாக்குறை

தேர்தலில் வாக்களிக்கப் பயன்படும் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரம் என்பது, ஒரு கட்டுப் பாட்டு பிரிவு, வாக்களிக்கும் பிரிவு, வாக்காளர் ஒப்புகைச் சீட்டு இயந்திரம் (விவிபாட்) என 3 பிரிவுகளைக் கொண்டது. தேர்தல் ஆணையத்துக்கு 12.50 லட்சம் வாக்குச்சாவடிகளில் பயன்படுத்த 15 லட்சம் கட்டுப்பாட்டுப் பிரிவு, 18 லட்சம் வாக்களிக்கும் பிரிவு, 15 லட்சம் விவிபாட் தேவைப்படுகிறது.

ஒரே நேரத்தில் நடைபெறும் மக்களவை, மாநில சட்டப்பேரவைத் தேர்தலின் போது, இரு மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களில் வாக்களிக்க வேண்டும். இதற்காக சுமார் 30 லட்சம் கட்டுப்பாட்டுப் பிரிவும், 43 லட்சம் வாக்களிக்கும் பிரிவும், 32 லட்சம் விவிபாட் இயந்திரங்களும் தேவைப்படும். இவற்றில் 35 லட்சம் மின்னணு வாக்குப்பதிவு இயந்திர பிரிவுகளுக்கு பற்றாக் குறை ஏற்பட்டுள்ளதாக தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

### அதிகரிக்கும் செலவு

கடந்த முறை கொள்முதல் செய்யப்பட்ட ஒரு கோடி வாக்குப்பதிவு இயந்திரங்களின் 3 பிரிவுக்கும் ரூ.15,000 கோடி செலவானது. இதில் விவிபாட் இயந்திரத்துக்கு மட்டும் ரூ.6,500 கோடிக்கு கொள்முதல் செய்யப்பட்டது.

மக்களவை, மாநில சட்டப்பேரவைகள், உள்ளாட்சி அமைப்புகள் ஆகிய 3 அடுக்கு அமைப்புக்கும் ஒரே நேரத்தில் தேர்தல் நடத்துவதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து முன்னாள் குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் தலைமையிலான உயர்நிலைக் குழு ஆராய்ந்து வருகிறது. இந்நிலையில், 3 அமைப்புகளுக்கும் ஒரே நேரத்தில் தேர்தல் நடைபெறும்போது, வாக்குப்பதிவு இயந்திர கொள்முதல் செலவு மேலும் அதிகரிக்கும்.

தயாரிப்பு, சோதனை பணிகள்: 15 ஆண்டுகள் ஆயுள்காலம் கொண்ட இந்த மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களைச் சேமித்து வைக்கப் போதிய எண்ணிக்கையிலான சேமிப்புக் கிடங்கு வசதிகள் ஏற்படுத்தப்பட வேண்டும்.

இந்த இயந்திரங்களை பாரத் எலக்ட்ரானிக்ஸ் நிறுவனம் (பிஇ எல்), இந்திய மின்னணுக் கழக நிறுவனம் (இசிஐஎல்) ஆகிய இரு பொதுத்துறை நிறுவனங் கள் தயாரித்து வருகின்றன.

அதிக எண்ணிகையிலான வாக்களிக்கும் இயந்திரங்களைத் தயாரிக்கவும் அவற்றை சோதனை செய்யவும் ஏறத்தாழ ஒன்றரை ஆண்டுகள் ஆகும் என தேர்தல் ஆணையம் தெரிவித்தது.

மேலும், தேர்தலுக்கு முன்பாக இந்த இயந்திரங்களை முதல் நிலை சோதனை செய்ய தேர்தல் ஆணையத்துக்கு அவகாசம் தேவை. இதைத் தொடர்ந்து, அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் முன்னிலையில் இரு வாக்குப் பதிவு இயந்திரங்களை சோதனை செய்ய மாதிரி தேர்தலும் நடத்தப்படும் என அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

திருவள்ளூர் மேற்கு மாவட்ட கழக

# செயல்வீரர்கள் அவசர ஆலோசனைக் கூட்டம்!

மாவட்ட கழகச் செயலாளர் - திருத்தணி எஸ்.சந்திரன், எம்.எல்.ஏ., அறிவிப்பு!



திருவள்ளூர் மேற்கு மாவட்ட தி.மு.கழக செயல்வீரர்கள் அவசர ஆலோசனைக் கூட்டம் வருகிற (30-10-2023 திங்கள்கிழமை) மாலை 03.00 மணியளவில் திருவள்ளூர் டோல்கேட் அடுத்த ICMR அருகில் உள்ள "கலைஞர் திடலில்" மாவட்டக் கழக அவைத்தலைவர் கே.திராவிடபக்தன் தலைமையிலும், கழக உயர்நிலை செயல்திட்ட குழு உறுப்பினரும், அரக்கோணம் நாடாளுமன்ற உறுப்பினருமான டாக்டர். எஸ்.ஜெகத்ரட்சகன் முன்னிலையிலும், கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி சிறப்புரையாற்றுகிறார்.

அதுசமயம் தலைமை செயற்குழு உறுப்பினரும், திருவள்ளூர் சட்டமன்ற உறுப்பினருமான வி.ஜி.ராஜேந்திரன், தலைமை செயற்குழு உறுப்பினர் எம்.பூபதி, கழக விவசாய அணி துணைச் செயலாளர் ஆர்.டி.இ.ஆதிசேசன், கழக நெசவாளர் அணி துணைத் தலைவர் ஓ.ஏ.நாகலிங்கம், மாநில தொண்டர் அணி பயிற்சியாளர் மாஸ்டர்.இ.குருதாஸ், மாவட்ட கழக நிர்வாகிகள் டாக்டர்.வி.சி.ஆர்.குமரன், சி.ஜெயபாரதி, பா.உதயமலர் பாண்டியன், எம்.மிதுன் சக்கரவர்த்தி, ப.சிட்டிபாபு, எஸ்.கே.ஆதாம், வி.கிஷோர், மு.சுப்பிரமணியம், பி.இராஜேஸ்வரி இரவீந்திரநாத், திருவள்ளூர் தொகுதி பார்வையாளர் ராஜா குப்புசாமி, திருத்தணி தொகுதி பார்வையாளர் சேப்பாக்கம் வி.பி.மணி ஆகியோர் கலந்துக் கொள்கின்றனர்.

முன்னதாக திருவள்ளூர் நகர கழக செயலாளர் சி.சு.ரவிச்சந்திரன் மற்றும் பூண்டி மேற்கு ஒன்றிய கழக செயலாளர் டி.கிறிஸ்டி (எ) அன்பரசு ஆகியோர் வரவேற்புரையாற்றிகிறார்கள் மேற்படி கூட்டத்திற்கு திருவள்ளூர் மேற்கு மாவட்டத்திற்குட்பட்ட ஒன்றிய நகர -பேரூர் கழகச் செயலாளர்கள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் கலந்துக் கொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

பொருள்: கழகத்தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையில் திருவள்ளூரில் வருகிற நவம்பர் 5 அன்று நடைபெற உள்ள வாக்குச்சாவடி நிலை முகவர்கள் (BLA2) பயிற்சி பாசறை கூட்டம் குறித்து. கழக ஆக்கப் பணிகள்.

**திருத்தணி எஸ்.சந்திரன்,எம்.எல்.ஏ.,**

செயலாளர், திருவள்ளூர் மேற்கு மாவட்ட தி.மு.க.